அழிக்கப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற செயல்களின் மூலமாக நமது இறுதி லட்சியமான பூரண மதுவிலக்கை நாம் நிச்சயமாக அடையமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை ஆகியவற்றிற்கான வெட்டுத் தீர்மானங்கள் மீதான என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கின்றேன்.

7. அறிவிப்பு

கள்ளச்சாராயம் இல்லாத இரண்டு தொகுதிகளின் உறுப்பினர்களுக்கு பேரவையின் சார்பில் பாராட்டு விழா நடத்தி கேடயம் வழங்க இருப்பது குறித்து

நண்பகல் *12-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறு செய்தி ஒன்றைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு செய்தியைத் தெரிவித்து இருந்தார்கள். அது குறித்துப் பதிலுரையின் போது, விளக்கம் ஏன் தெரிவிக்கவில்லை என்பதுபோல சிலர் எண்ணக்கூடும். எனவே, நானே பேரவையின் சார்பில், அந்தச் செய்தியைத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதி, அந்தச் செய்தியைப் பேரவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மது விலக்குப் பிரச்சாரக் குழுவினர் ஒரு முடிவு எடுத்து, கள்ளச் சாராயமே இல்லாத சட்டமன்றத் தொகுதிகளைக் கண்டெடுத்து, அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரைப் பாராட்டுவதன் மூலம், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தப் பணியில் ஈடுபடலாம் என்கிற வகையில் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களைப் பாராட்டி கேடயம் வழங்க வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். அந்த முடிவின்படி, மாநிலத்தின் எல்லா சட்டமன்றத் தொகுதிகளிலேயும் விரிவாக ஆய்வு செய்து பார்த்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து இருக்கிற தர்மபுரி மாவட்ட பர்கூர் தொகுதி (மேசையைத் தட்டும் ஒலி) முழுமையாக கள்ளச் சாராயமே இல்லை என்கிற அளவுக்கு ஒரு சாதனை படைத்து இருக்கிறது என்கிற குறிப்பை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்து இருந்தார்கள்.

அதேபோல், கோவை மாவட்டம் வால்பாறை சட்டமன்றத் தொகுதியும் முழுமையாக கள்ளச் சாராயத்தை ஒழித்த தொகுதி என்று கண்டெடுக்கப்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில், அந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கேடயம் வழங்குவது என்கிற அந்தக் குழுவின் பரிந்துரையை நிறைவேற்றுகிற போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியே அதிலே தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கே கேடயம் வழங்க வேண்டி இருக்கிற பாராட்டத்தக்க சூழ்நிலை இருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் அதனைத் தெரிவிக்கவில்லை என்று கருதுகிறேன். அந்த வகையில் பேரவையின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்காவிட்டாலும், இந்தச் செய்தியைத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலேயும், பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் பாராட்டைத் தெரிவிப்பது (மேசையைத் தட்டும் ஒலி) பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தத் தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிற பல்வேறு நலத் திட்டப் பணிகளை விரிவாகவும், அந்தப் பகுதி மக்கள் முழுமையாகப் பயன்படுகிற வகையிலேயும் செய்து வந்திருக்கிற காரணத்தாலே, அதன் அடிப்படையில் வேறு சில தொழில்கள் அந்த மக்களுக்குக் கிடைக்கிற காரணத்தால், அந்த உணர்வுள்ள மக்கள்கூட இன்றைக்கு மனம் திருந்தி, முழுமையாக கள்ளச் சாராயம் தங்கள் தொகுதியில் இல்லாத சூழ்நிலையை உருவாக்கக்கூடிய ஒரு நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். எனவே, அந்தக் குழு எடுத்த முடிவின்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நாம் கேடயம் வழங்கவேண்டி இருக்கிற காரணத்தால், இந்தத்துறையினர் வழங்காமல், பேரவையின் சார்பிலே பேரவை சம்பந்தப்பட்ட சீரிய நிகழ்ச்சி ஒன்றில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்தப் பாராட்டுக் கேடயம் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, கோவை மாவட்டம் வால்பாறை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஸ்ரீதரன் அவர்களுக்கும் அந்தக் கேடயம் அந்த விழாவில் வழங்கப்படும் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியைப் பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

கோரிக்கை எண்2 - மாநில ஆயத்தீர்வைத் துறை கோரிக்கை எண்15 - காவல் துறை. கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்	தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை அளித்த எண்ணற்ற வரப்பிரசாதங்களில்